# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 158/மா/2023**

**நாள்: 08.07.2023**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் - 03 (மத்தியம்),
மதுரை மாநகராட்சி,
மதுரை. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண் 5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 23.01.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.01.2023–ல் பெறப்பட்டு 158/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண் 5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 23.01.2023 நாளிட்ட தனது மனுவில் :

“மதுரை மாநகராட்சி மண்டலம் - 3 (மத்தியம்) கென்னட் ஹாஸ்பிட்டல் சாலையில் 70 அடி ரோடு (வைத்தியநாதபுரம்) இயங்கிவரும் ஐஸ்வர்யா கருத்தரிப்பு மையம் (Iswariya Fertility Center) மருத்துவமனை, தரை தளம் மற்றும் ஐந்து மாடி கொண்ட கட்டிடம் ஆகும். இம்மருத்துவமனையில் வாகன நிறுத்தம் (Parking) இடம் ஒதுக்கப்படாததால் ரோட்டின் மேல் வாகனம் நிறுத்துவதால் போக்குவரத்திற்கு மிகவும் இடையூராக உள்ளது.

இங்கு பணிபுரியும் மருத்துவர்கள் செவிலியர் மற்றும் இதர ஊழியர்களுக்கும் அனைத்து பணியாளர்களுக்கும் தொழில் வரி வசூலிக்காமலும் மேற்படி மருத்துவமனைக்கு முழுமையான கட்டிடத்தை அளவீடு செய்யாமல் குறைந்த அளவீடு செய்து சொத்துவரி வசூலிப்பதினால் மாநகராட்சிக்கு பெருத்த வருவாய் இழப்பீடு ஏற்படுவதற்கு காரணமான முன்னால், இன்னால் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான கடுமையான நடவடிக்கை எடுத்தும், அவர்களின் சம்பளத்தில் பிடித்தம் செய்து மாநகராட்சி கருவூலத்தில் வரவுவைக்க உத்திரவிடுமாறு மிகவும் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறேன்.

மேற்படி ஐஸ்வர்யா கருத்தரிப்பு மருத்துவமனை பொது மக்கள் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965-ன் பிரிவு 2 (8)ன்படி (Section 2 (8) of the Tamil Nadu Public Building Licensing Act 1965) உரிமம் பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டுவரும் ஐஸ்வர்யா மருத்துவமனை அகற்ற (Remove) உத்திரவிடுமாறு பணிவன்புடன் வேண்டுகிறேன். மேலும் மேற்படி, ஐஸ்வர்யா மருத்துவமனை தரை தளம் + ஐந்து மாடிகள் கட்டிடம் திட்ட அனுமதிக்கு மாறாக (Violation of Building) கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால் மருத்துவமனையை அகற்ற (Remove) உத்திரவிடுமாறும் வேண்டிக் கொள்கிறேன்.

மேற்படி மருத்துவமனைக்கு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணி துறையில் முறையான அனுமதி பெறாமலும் பொது மக்கள் பயன்பாட்டு மருத்துவமனையாக இருப்பதால் 1971 ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு திட்ட இயக்கத்தில் (Directorate of town and Country Planning)-ன் படி ஒப்புதல் பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக மருத்துவமனை செயல்பட்டு வருகிறது.

ஐஸ்வர்யா மருத்துவமனை நிருவாகத்தினரிடம் முழுமையான சொத்துவரி, தொழில் வரி வசூலிக்காமலும், அரசு திட்ட விதிகளுக்கு மாறாகவும் முறையான அனுமதி பெறாமல் இயங்கிவரும் மருத்துவமனையை கண்காணிக்கத்தவறிய சம்மந்தப்பட்ட மாநகராட்சி ஊழியர் மற்றும் அலுவலர்கள், உயர் அதிகாரியின் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்திரவிட்டும், சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டுவரும் ஐஸ்வர்யா கருத்தரிப்பு மையம் (Iswariya Fertility Center) மருத்துவமனை கட்டிடத்தை அகற்றியும் (Remove) நகர் ஊரமைப்பு சட்டம் 1971-பிரிவுகள் 56 (1) மற்றும் 57 உடன் படிக்கப்பட்ட பிரிவுகள் 85-ன் கீழ் Stop Work Notice / Notice Calling for approval Plan அறிவிப்பினையும், அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிடுதல் Lock and Seal and demolition notice வழங்கியும் மற்றும் அமலாக்க நடவடிக்கை விரைவாக எடுத்து அறிக்கை தாக்கல் செய்ய உத்திரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தை மிகவும் பணிவுடனும், தாழ்மையுடனும் இருகரம் கூப்பி வேண்டிக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**2. இம்முறைமன்ற கடித நாள் 6.2.2023 வாயிலாக மதுரை மாநகராட்சி ஆணையரிடமிருந்து இம்மனுமீது அறிக்கை கோரப்பட்டது. மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன் உதவி ஆணையர் தன்னுடைய 27.6.2023 நாளிட்ட அறிக்கையில் :**

மனுதாரரின் மனு பரிசீலனை செய்யப்பட்டது என்றும் ஐஸ்வர்யா கருத்தரிப்பு மருத்துவமனை நிர்வாகத்தினரால் 01.04.2018 முதல் சொத்துவரி மற்றும் தொழில்வரி நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது என்றும், மருத்துவமனைக்கான கட்டிட வரைபடம் வங்கி வசம் உள்ளதால் அதனை சமர்ப்பிக்க இயலாத நிலை உள்ளதாலும், மேற்கண்ட கட்டிட வரைபட நகல் கோரி உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது என்றும் அம்மருத்துவமனைக்கு சொத்துவரி வரிவிதிப்பு எண்.115/059/900105 விதிக்கப்பட்டுள்ளது என்றும் ஐஸ்வர்யா கருத்தரிப்பு மருத்துவமனைக்கும் மற்றும்

பணியாளர்களுக்கும் தனித்தனியாக தொழில்வரி விதிக்கப்பட்டு தொடர்ந்து தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருகிறது என்றும் (தொழில் வரி விதிப்பு எண்.115/016/00150 - Iswarya Fertility Services (P) Ltd., தொழில் வரி விதிப்பு எண்.115/016/00149 - Iswarya Fertility Services (P) Ltd., (Staff) Total Number of Staffs Working - 80 Nos) கள அலுவலர்களின் விரிவான அறிக்கை பெற்ற பின்னர் முழுமையான பதில் விபரங்கள் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்."

**3. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 28.06.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.06.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 28.06.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

மதுரை மாநகராட்சி, மண்டலம்–3ல் (மத்தியம்) உள்ள கென்னட் ஹாஸ்பிடல் சாலையில் இயங்கிவரும் ஐஸ்வர்யா கருத்தரிப்பு மையம் தரைத்தளம் மற்றும் ஐந்து மாடிகளைக் கொண்ட மருத்துவமனை ஆகும். இம்மருத்துவமனைக்கு அரசு சட்ட விதிகளின்படி, அங்கு வாகனங்கள் நிறுத்துவதற்கான இடவசதி (Parking) இல்லை. மருத்துவமனைக்கு வருபவர்கள் தங்களது வாகனங்களை மேற்கண்ட சாலையிலேயே நிறுத்திவிட்டு செல்வதால் அச்சாலையில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

மேற்கண்ட ஐஸ்வர்யா கருத்தருப்பு மையம் அனுமதிக்கு மாறாக ஐந்து மாடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் இங்கு பணிபுரியும் மருத்துவர், செவிலியர் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கான தொழில்வரி வசூலிக்கப்படுவதில்லை. இம்மருத்துவமனை கட்டிடத்தை முழுமையாக அளவீடு செய்து சொத்து வரி வசூலிக்காத காரணத்தால் மாநகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு வருகிறது.

எனவே மேற்கண்ட மருத்துவமனை கட்டடங்கள் மீது நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவுகள் 56(1) மற்றும் 57 உடன் படிக்கப்பட்ட பிரிவுகள் 85ன் கீழ் Stop work Noice / Notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்படவேண்டிய Lock and Seal and Demolition Noticeம் மாநகராட்சியால் வழங்கிடவும் மேலும் சரியான சொத்து வரி மற்றும் தொழில் வரியை மேற்கண்ட மருத்துவமனையிடமிருந்து மாநகராட்சியால் வசூல் செய்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

**4. மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன் உதவிப் செயற்பொறியாளர் (பொ) (திட்டம்) மற்றும் உதவிப் பொறியாளர் (பொ) ஆகியோர் 28.06.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:**

மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண் 59 கென்னட் சாலையில் அமைந்துள்ள ஐஸ்வர்யா கருத்தரிப்பு மருத்துவமனை ஆய்வு செய்யப்பட்டது. அங்கு Deviation உள்ளது. எனவே, மேற்கண்ட மருத்துவமனையின் கட்டட வரைபட நகல் கோரப்பட்டது. அவர்களால் குறிப்பிட்ட காலத்தில் அளிக்க இயலாத நிலையில், உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக் குழுமத்திடம் 23.6.2023

நாளிட்ட கடிதத்தின் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. கட்டட அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் விதிகளை மீறி கட்டப்பட்டுள்ள மேற்கண்ட மருத்துவமனை கட்டடத்திற்கு Tamil Nadu Town and Country Planning Act, 1971–ன்படி Stop work Noice / Notice calling for approved plan அறிவிப்பினையும் மேலும் Lock and Seal, De-occupation and Demolition Noticeம் மாநகராட்சியால் வழங்கிடவும் தேவையான நடவடிக்கைகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் மேற்கண்ட மருத்துவமனைக்கான சொத்து வரியும், அம்மருத்துவ மனையில் பணியாற்றும் பணியாளர்களிடமிருந்து முறையாக தொழில் வரியும் வசூலிக்கப்பட்டு வருகிறது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நேர்வு தொடர்பாக மதுரை மாநகராட்சி உதவி ஆணையரின் (மண்டலம் 3) 27.6.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்.

**5. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சி உதவிப் செயற்பொறியாளர் (ம) உதவிப் பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:**

மனுதாரர் மதுரை மாநகராட்சி மண்டலம் -3 (மத்தியம்) உள்ள கென்னட் ஹாஸ்பிடல் சாலையில் இயங்கிவரும் ஐஸ்வர்யா கருத்தரிப்பு மையம் அனுமதிக்கு மாறாக ஐந்து மாடி கட்டிடம் கட்டப்பட்டுள்ளது எனவும், அங்கு பணிபுரியும் மருத்துவர், செவிலியர் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கான தொழில்வரி வசூலிக்கப்படவில்லை எனவும் தெரிவித்து அம்மருத்துவமனை கட்டடத்தின் மீது நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன்படி உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மாநகராட்சிப் பொறியாளர்கள் மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஐய்வர்யா மருத்துவமனை கட்டடம் ஆய்வு செய்யப்பட்டது எனவும், அதில் கட்டட விதி மீறல் உள்ளது கண்டறியப்பட்டு, அம்மருத்துவமனையின் வரைப்படம் நகல் கோரப்பட்டதில், அம்மருத்துவமனை கடன் பெறும் பொருட்டு வங்கியில் அளித்திருப்பதால், உறுப்பினர்-செயலர், உள்ளூர் திட்டக்குழுமத்திடம் வரைபட நகலினை மாநகராட்சிக்கு அளிக்குமாறு கோரப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார். மேலும் மேற்கண்ட மருத்துவமனையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு உரிய தொழில் வரி வசூலிக்கப்பட்டு வருகிறது என்பதும், அம்மருத்துவமனை கட்டடத்திற்கு முறையான சொத்துவரி விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட்டு வருகிறது என்பதும், மதுரை மாநகராட்சி மண்டலம்-3 உதவி செயற்பொறியாளர் (பொறுப்பு) (திட்டம்) மற்றும் உதவி பொறியாளர் (பொறுப்பு) ஆகியோரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரரின் புகார் மனுவின் மீது 6.2.2023 நாளிட்ட இம்முறைமன்ற கடிதத்தில் மதுரை மாநகராட்சியின் அறிக்கை கோரப்பட்டும், மிகவும் காலதாமதமாக, மருத்துவமனையின் **வரைப்படம் நகல் கோரப்பட்டு அவர்களால் அளிக்க இயலாத காரணத்தினால், உள்ளூர் திட்டக்குழுமத்திடம் வரைபடம் நகல் கோரப்பட்டுள்ள செயலை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது.** மேலும் ஐஸ்வர்யா மருத்துவமனைக்கான சொத்துவரி விதிக்கும்போது அம்மருத்துவமனை அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ளதா என கள ஆய்வு செய்யப்படவில்லை என்று தெரியவருகிறது. **இம்முறைமன்றம் விசாரணைக்கு உத்திரவிட்ட நிலையில்தான்**

அம்மருத்துவமனையின் கட்டடம் ஆய்வு செய்யப்பட்டு விதி மீறல் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. இதற்கு மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன் களப் பணியாளர்களின் மெத்தனப்போக்கே காரணம் என்று இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விரும்புகிறது.

மனுதாரர் தன்னுடைய மனுவில் குறிப்பிட்ட மருத்துவமனையில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தொழில் வரி விதிக்கப்படுவது இல்லை எனவும், அம்மருத்துவமனையின் கட்டடத்தின் சொத்துவரி விதிக்கப்படவில்லை என்றும் தெரிவித்து அதற்கான ஆதாரமாக ஆவணங்களை ஏதும் சமர்ப்பிக்கவில்லை. ஆனால் மேற்கண்ட மருத்துவமனைக்கு மதுரை மாநகராட்சியால் உரிய சொத்து வரி ரூ.10,13,787/- ஒரு அரையாண்டுக்கு வசூலிக்கப்படுவதும், அங்கு பணிபுரியும் 80 பணியாளர்களின் தொழில் வரி வசூலிக்கப்படுகிறது என்று தெரிவித்து அதற்கான ஆதார ஆவணங்களை சமர்ப்பித்துள்ள நிலையில், எவ்வித ஆதார ஆவணங்கள் சமர்ப்பிக்காமல் மனுதாரர் தனது மனுவில் புகார் தெரிவித்து இருப்பது கண்டிக்கத்தக்கது. ஏற்கெனவே இவ்வாறான ஆதாரம் ஏதும் இல்லாமல் இம்முறைமன்றத்திற்கு புகார் அளிப்பது ஏற்கத்தக்கதல்ல என்று தெரிவித்த நிலையில், மீண்டும் மனுவில் புகார் தெரிவிப்பது மனுதாரரின் புகாருக்கு உள்நோக்கம் கொண்டதாக உள்ளது என்று இம்முறைமன்றம் கருதுகிறது. மனுதாரர் புகார் மனு அளிக்கும் போது உரிய ஆதார ஆவணங்களை சமர்ப்பிக்கவேண்டும் என மனுதாரர் அறிவுறுத்தப்படுகிறார்.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், இம்முறைமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் குறிப்பாக:

பிரிவு 7. The Ombudsman shall perform all or any of the following functions, namely :–

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely

(a) xx xx xx

(b) xx xx xx

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules-ன்படி, பின்வருமாறு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது:-

மேற்கண்ட ஐஸ்வர்யா மருத்துவமனை கட்டடத்தினை ஆரம்ப நிலையிலேயே கள ஆய்வு செய்து விதிமீறல் இருப்பதை கண்டறியாமல் செயல்பட்ட மதுரை மாநகராடசி மண்டலம் 3ன் சம்மந்தப்பட்ட முன்னால் மற்றும் இன்னால் அலுவலர்களின் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும் மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன் உதவி செயற் பொறியாளர் (பொறுப்பு) (திட்டம்) மற்றும் உதவிப் பொறியாளர் ஆகியோர் வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு உறுப்பினர் - செயலர் உள்ளூர் திட்டக் குழுமத்திடம்

மேற்கண்ட வரைப்படம் நகலை விரைவில் பெற்று அம்மருத்துவமனை கட்டடத்தில் விதிமீறல் இருப்பின் "Tamil Nadu Town and Country Planning Act, 1971" ன்படி உரிய சட்டபூர்வமான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை இம்முறைமன்றத்திற்கு 45 தினங்களுக்குள் அனுப்பிவைக்குமாறு மதுரை மாநகராட்சி மண்டலம் 3ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 08 - ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி, மனை எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி, மதுரை – 18.

2. ஆணையர், மதுரை மாநகராட்சி, தல்லாகுளம், மதுரை – 2.

3. உதவி ஆணையர், மண்டலம் - 02, மதுரை மாநகராட்சி, மதுரை.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

5. இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர் (முகூ.பொ)